குறிப்பு:—60-திருவானைக் காவினின்று கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 5-மைலில் (திருவெறும்பியூர் ஸ்டேஷன் மார்க் கத்திலுள்ள) 59-திருப்பாற்றுறை யிருக்கின்றது. 58-திரு

Digitized by Google

மாந் துறையிலிருந்து, கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 6
மைலில் (பூதலூர்ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 57-திருஅன்
பிலாலந் துறையும் வடக்கே கரை மார்க்கமாய் 2-மைலில்
ஆளுடையநாயனார் இருந்ததலமாகிய மங்கலவூர் என்ற திருமங்
கலமும் தெற்கே மட்சாலை மார்க்கமாய் 3-மைலில் (மத்தி
யில் கொள்ளிடத்திற்குப் பரிசு) திருவெறும்பியூர் ஸ்டேஷன்
மார்க்கத்திலுள்ள 59-திருப்பாற்றுறையு மிருக்கின்றன. 61-
திருப்பைஞ்ஞீலியிலிருந்து தென்கிழக்கே கரை மார்க்கமாய்
6-மைலில் 62-திருப்பாச்சிலாச்சிராமம் என்ற திருவாசியிரு
கின்றது.

எழுமனூர் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே மட்சாலைமார்க்கமாய்
ஒன்றரை மைலில் அகண்டகாவேரித் துறைக்குச் சமீபமாய்
66-திருப்பராய்த்துறை இருக்கின்றது.

குழித்தலை ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே மட்சாலை மார்க்கமாய்
ஒன்றரை மைலில் 65-திருக்கடம்பந்துறை என்ற கடம்ப
கோயில் இருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து தெற்கே மட்
சாலை மார்க்கமாய் ஆறரை மைலில் 64-திருவாட் போக்
என்ற இரத்தினகிரிமலை இருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து
வடக்கே அகண்ட காவேரி வடகரையில் (காவிரிக்குப்பரிசு)
2-மைலிலுள்ள முசிலியிலிருந்து மேற்கே கற்சாலை மார்க்க
மாய் 3-மைலில் 63-திரு ஈங்கோய் மலை இருக்கின்றது.

———:0:———

மாயூரம் ஜங்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், பே
ளம் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கு முள்ள ரெயில்வே

மங்க நல்லூர் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே அரை மைலில் திருவழு
வீரட்டம் இருக்கின்றது.

பேரளம் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே மட்சாலை மார்க்கமாய்
மைலில் 119-திருமீயச்சூரும், ஷை ஆலயத்தின் வடக்கு

Digitized by Google

ஊத்தில் 120-திருமீயச்சூரிளங்கோயிலும், இதினின்றுமேற்க மட்சாலை மார்க்கமாய் 2-மைலில் 122-திருப்பாம்புரமும், இதினின்று தென்மேற்கே கரை மார்க்கமாய் 2-மைலில் 123-திருச்சிறுகுடியும் இருக்கின்றன.

குறிப்பு :—123-திருச்சிறுகுடியிலிருந்து தென்மேற்கே கரைமார்க்கமாய் 2-மைலில் (பூந்தோட்டம் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 124-திருவீழிமிழலை இருக்கின்றது. 119-திருமீயச்சூரிலிருந்து தெற்கே மட்சாலை மார்க்கமாய் 7-மைலில் (பூந்தோட்டம் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 121-திலதைப்பதி யிருக்கின்றது.

——:o:——

பேரளம் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், திருவாரூர் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் உள்ளவையில் வே.

பூந்தோட்டம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே மட்சாலை மார்க்கமாய் ஒரு மைலில் ஆற்றின் தென்கரையில் 121-திலதைப்பதியும், இதினின்று மேற்கே மட்சாலை மார்க்கமாய் 4-மைலில் 124-திருவீழி மிழலையும், இதினின்று வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் ஒன்றரை மைலில் 125-திருவன்னியூர் என்ற அன்னூரும் இருக்கின்றன. ஸ்டேஷனிலிருந்து கிழக்கே மட்சாலை மார்க்கமாய் ஒன்றரை மைலில் 118-திரு அம்பர் மாகாளமும், இதினின்று கிழக்கே மட்சாலை மார்க்கமாய் அரை மைலில் 117-திரு அம்பர் பெருந்திருக் கோயிலு மிருக்கின்றன.

குறிப்பு:—124-திருவீழி மிழலையிலிருந்து வடகிழக்கே கரை மார்க்கமாய் 2-மைலில் (பேரளம் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 123-திருச்சிறு குடியிருக்கின்றது. 125-திருவன்னியூர் என்ற அன்னூரிலிருந்து வடமேற்கே கரைமார்க்கமாய் 2-மைலில் (ஆடுதுறை ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 97-திருநல்லம் என்ற கோனேரி ராஜபுரமும், ஷை திருவன்னியூர் என்ற அன்னூரிலிருந்து தென்மேற்கே கரைமார்க்கமாய் இரண்டரை மைலில் (ஆடுதுறை ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 126-திருக்கருவிலியு மிருக்கின்றன. 117-திருவம்பர் பெருந்திருக்கோயிலினின்றுதெற்கே கரைமார்க்கமாய்3-மைலில் நன்னிலம் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள 138-திருப்புகலூர் இருக்கின்றது. 121-திலதைப் பதியினின்று வடக்கே மட்சாலை

மார்க்கமாய் 2-மைலில் (பேரளம்ஸ்டேஷன் மார்க்கத்தி லுள்ள) 119-திருமீயச்சூர் இருக்கின்றது.

நன்னிலம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே கரை மார்க்கமா அரைமைலில் 136-திருப்பனையூர் இருக்கின்றது. ஸ்டேஷனி லிருந்து மேற்கே கற்சாலை மார்க்கமாய் ஒன்றரை மைலில் ஆற்றுக்குத் தென் கரையில் 135-திருக்கொண்டீச் சரமும் இதிலிருந்து கற்சாலை மார்க்கமாய் மேற்கே ஒன்றரை மை லில் ஆற்றுக்குத் தென் கரையில் 134-திருநன்னிலத்துப் பெருங்கோயிலும், இதினின்று தென் மேற்கே மாப்பிள்ளைக் குப்பம் மட்சாலை மார்க்கமாய் 3-மைலில் 133-திருவாஞ்சிய மும் இருக்கின்றன. ஸ்டேஷனிலிருந்து கிழக்கேமட்சாலை மார்க்கமாய் 4-மைலில் 138-திருப்புகலூரும், ஷை ஆலயத்தின் வடக்கு ஆவரணத்தில் 139-திருப்புகலூர் வர்த்தமானீச் சர மும், இதினின்று தெற்கே மட்சாலை மார்க்கமாய் ஒருமை லில் (திருக்கண்ணபுரம் கீழ வீதியில்) 140-திரு இராமநதீச் சரமும், இதினின்று கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 2-மை லில் 142-திருச்செங்காட்டங் குடியும், இதினின்று வடகிழக் கே கரை மார்க்கமாய் 2-மைலிலும் 138-திருப்புகலூரிலிருந்து கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 3-மைலிலும் 143-திருமரு கலும், இதினின்று வடகிழக்கே மட்சாலை மார்க்கமாய் (ஆற்றுக்குப்பரிச்) ஒருமைலில் 144-திருச்சாத்த மங்கையென் றசெய்யாத்த மங்கையு மிருக்கின்றன.

குறிப்பு:—139-திருப்புக லூரிலிருந்து வடக்கே கரை மார்க்கமாய் 3-மைலில் (பூந்தோட்டம் ஸ்டேஷன் மார்க்கத்தி லுள்ள) 117-திருஅம்பர் பெருந்திருக் கோயில் இருக்கின்றது. 144-திருச்சாத்தமங்கை என்ற செய்யாத்த மங்கையிலிருந்து வடகிழக்கே 5-மைலில் 115-திருநள்ளாறுஇருக்கின்றது. 133-திருவாஞ்சியத்தினின்று மேற்கே மட்சாலை மார்க்கமாய் 6-மைலில் (கொரடாச்சேரி ஸ்டேஷன் மாரக்கத்திலுள்ள) 157-திருக்குடவாயி லிருக்கின்றது.

வெட்டாறு ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே ஒரு மைலில் 149-திருப்பள்ளியின் முக்கூடல் என்ற அரிக்கரியான் பள்ளி இருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மட்சாலை மார்க்கமாய் மூன்றரை மைலில் 137-திருவிற் குடியும், இதினின்று கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 3-மைலில் 141-திருப்பயற்றூர் என்ற திருப்பயற்றங்குடியு மிருக்கின்றன.

குறிப்பு:—149-திருப்பள்ளியின் முக்கூடல் என்ற அரிக்கரியான் பள்ளியிலிருந்து தென்மேற்கே 2-மைலில் 151-திருவாரூர் இருக்கின்றது.

திருவாரூர் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்துவடமேற்கே கற்சாலை மார்க்கமாய் ஒரு மைலில் 151-திருவாரூர் மூலட்டானமும், ஷை ஆலயத்தின் உள் ஆவரணத்தின் தென் கிழக்கு மூலையில் 150-திருவாரூர் அரநெறியும், ஷை தலத்தின் கீழவீதியில் 152- திருப்பரவையுண் மண்டளி என்ற தூவாநயினார் கோயிலும், 151-திருவாரூர் மூலட்டானத்தினின்று மேற்கே மட்சாலை மார்க்கமாய் ஒன்றரை மைலில் 153-திருவிளமரும் இருக்கின்றன.

குறிப்பு:—151-திருவாரூர் மூலட்டானத்தினின்று வடகிழக்கே 2-மைலில் (வெட்டாற ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள)149-திருப்பள்ளியின் முக்கூடல் என்ற அரிக்கரியான் பள்ளி இருக்கின்றது. 151-திருவாரூரினின்று மேற்கே மட்சாலைமார்க்கமாய் 7-மைலில் (குழிக்கரை ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள)154-திருக்காவீரம் என்ற கரையபுர மிருக்கின்றது.

திருவாரூர் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், பட்டுக்கோட்டை ஸ்டேஷனுக்கும் உள்ளரயில்வே.

திருநாட்டியத்தான்குடி ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே முக்கால் மைலில் மட்சாலை மார்க்கமாய் 181-திருநாட்டியத்தான் குடியிருக்கின்

றது. ஸ்டேஷனிலிருந்து தென் மேற்கே 3-மைலில் ம
சாலை மார்க்கமாய் 177-திருப்பேரெயில் என்ற வங்கார
பேரையூர் இருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து கிழக்கே க
சாலை மார்க்கமாய் 2-மைலில் திருவாரூரிலிருந்து திருத்துறை
பூண்டிக்குப் போகிற ரஸ்தாவில் சந்திக்கு மிடத்திற்கு வட
புறத்தில் குன்னூரும் தென் புறத்தில் புன்னவாசலு மிருக்கி
ன்றன. இந்தக் குன்னூரிலிருந்து கிழக்கே மட்சாலை மார்க்க
மா யிரண்டரைமைலிலுள்ள ஆதமங்கலத்தினின்று,வடக்கே
அரைமைலில் 183-திருக்கன்றாப்பூரும் தெற்கே அரைமைலில்
184 திருவலி வலமும் வடகிழக்கே திருவிசைப்பா பெற்ற
தலமாகிய திருச்சாட்டியத்தான் குடியும் இருக்கின்றன. ஷை
புன்னவாசலிலிருந்து தெற்கே கற்சாலை மார்க்கமாய் ஒரு
மைலில் 182-திருக்காராயில் இருக்கின்றது.

குறிப்பு:—182-திருக்காராயிலி னின்று தெற்கே கற்
சாலை மார்க்கமாய் 3 மைலில் (திருநெல்லிக்கா ஸ்டேஷன்
மார்க்கத்திலுள்ள) 185-திருக்கைச்சின மிருக்கின்றது. மேற்
கண்ட ஆதமங்கலத்திலிருந்து கிழக்கே மட்சாலை மார்க்கமாய்
3 மைலில் (கீழ்வேளூர் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 148-
திருக்கோளூர் இருக்கின்றது.

திருநெல்லிக்கா ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே கால் மைலில் 180-திரு
நெல்லிக்காவும், இதினின்று தென்மேற்கே மட்சாலை மார்க்க
மாய் ஒரு மைலில் 179-திருத்தெங்கூரும் இருக்கின்றன.
ஸ்டேஷனிலிருந்து கிழக்கே மட்சாலைமார்க்கமாய் 2-மைலில்
185-திருக்கைச்சினமும், இதினின்று கிழக்கே மட்சாலைமார்
க்கமாய் 5-மைலில் 186-திருக்கோளிலி என்ற திருக்குவளை
யும், இதினின்று தென்கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 3-
மைலில் 187-திருத்தெண்டிருவாய்மூரும் இருக்கின்றன.
(186-திருக்கோளிலி என்ற திருக்குவளைக்கும் 187-திருத்
தெண்டிருவாய்மூருக்கும் மத்தியில் எட்டுகுடி என்ற சுப்பிர
மணிய க்ஷேத்திரம் ஒன்று இருக்கிறது.) இதினின்று மேற்

கமட்சாலை மார்க்கமாய் ஒன்றரை மைலில் 169-திருச்சிற்றம்பலம் என்ற சிற்றும்பூர் இருக்கின்றது.

குறிப்பு :—185-திருக்கைச்சினத்தினின்று வடக்கே கற்சாலை மார்க்கமாய் 3-மைலில் (திருநாட்டியத்தான் குடி ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 182-திருக்காராயிலிருக்கின்றது. 169-திருச்சிற்றேமம் என்ற சிற்றும்பூரிலிருந்து தெற்கே அரை மைலிலுள்ள அரிச்சந்திரநதித் தென்கரை மட்சாலை வழியாய் மேற்கே 4 மைலில் பொன்னிறை ஸ்டேஷன் இருக்கின்றது.

பொன்னிறை ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே மட்சாலை மார்க்கமாய் மூன்றரை மைலில் அரிச்சந்திரநதி வடகரையில் 178-திருக்கொள்ளிக்காடும், இதினின்று ஷை ஆற்றின் தென் கரை மட்சாலை வழியாய் மேற்கே 5-மைலில் 175-திருவண்டு துறையுமிருக்கின்றன.

குறிப்பு:—ஸ்டேஷனிலிருந்து கிழக்கே அரிச்சந்திரநதித் தென்கரை மட்சாலை மார்க்கமாய் மூன்றரை மைலிலிருந்து வடக்கே அரை மைலில் ஆற்றின் வடகரையில் (திருநெல்லிக்கா ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 169-திருச்சிற்றேமம் என்ற சிற்றும்பூர் இருக்கின்றது. 175-திருவண்டுதுறையிலிருந்து வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் 5-மைலில் கொரடாச்சேரி ஸ்டேஷனிருக்கின்றது.

திருத்தருப்பூண்டி ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலை மார்க்கமாய் 2-மைலில் 173-திருத்தண்டலை நீணெறி என்ற தண்டலைச்சேரியும், இதன் கீழ்பக்கத்தில் அரிவாட்டாய நாயனார் இருந்த தலமாகிய கணமங்கலமு மிருக்கின்றன. ஸ்டேஷனிலிருந்து கிழக்கே மட்சாலை மார்க்கமாய் (நடுவில் 10-வது மைலில் தங்கக் கூடிய இடம் மேலமருதூர்) 23-மைலில் 188-திருமறைக்காடு என்ற வேதாரணியமும், இதினின்று தெற்கே

கோடிக்கரைக்குப் போகிற மட்சாலை மார்க்கத்தில் இரண்டரை மைலில் 189-திரு அகத்தியான் பள்ளியும், இதினின்று தெற்கே மட்சாலைமார்க்கமாய் 7-மைலில் 190-திருக்கோடிகுழகர் என்ற கோடிக்கரையும் இருக்கின்றன. ஸ்டேஷனிலிருந்து மன்னார்குடிக்குப் போகிற மட்சாலையில் 7-வது மைலில் உள்ள திருப்புத்தூர் எல்லையில் முள்ளியாற்று மதகிலிருந்துதெற்கே முத்துப் பேட்டைக்குப் போகிற தீவட்டிக்கரைமட்சாலை மார்க்கத்தில் 3-மைலில் 168-திருக்களரும் மேற்கண்ட திருப்புத்தூரிலிருந்து மேற்கே மன்னார்குடிக்குப் போகிற மட்சாலையில் 2-வது மைலில் 174-திருக்கோட்டூரு மிருக்கின்றன.

குறிப்பு :—174-திருக்கோட்டூரிலிருந்து வடமேற்கே (மன்னார்குடி மட்சாலை மார்க்கமாய்) 11-மைலில் (நீடாமங்கலம்ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 167-திருப்பாதாளீச்சரம் என்ற பாம்பணி யிருக்கின்றது. நாகபட்டணத்திலிருந்துதோணி மார்க்கமாய் 188-வேதாரணியத்திற்குப் போகலாம்.

பாண்டி ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தெற்கே போகிற மட்சாலை, 4-வது மைலில் முத்துப்பேட்டையி லிருந்து வேதாரணியத்திற்குப் போகிற மட்சாலையில் சந்திக்கிறது. சந்திப்பினின்று மேற்கே கால் மைலில் 171-திருஇடும்பாவனமும், சந்திப்பினின்று கிழக்கே அரை மைலில் 172-திருக்கடிக்குளம் என்ற கற்பக நாதர் குளமு மிருக்கின்றன.

குறிப்பு :—திருவிடும்பாவனத்தினின்று மேற்கே மட்சாலை மார்க்கமாய் 3-மைலில் விஷ்ணு க்ஷேத்திரமாகிய தில்லைவிளாகம்ஸ்தலமும்,இதினின்று வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் 3-மைலில் தில்லை விளாகம் ஸ்டேஷனும் இருக்கின்றன.

முத்துப்பேட்டை ஸ்டேஷன்

ஸ்டேஷனிலிருந்து வடக்கே ஒரு மைலில் மட்சாலை மார்க்கமாய் 170-திரு உசாத்தானம் என்ற கோயிலூரிருக்கின்றது.

Digitized by Google

பேரளம் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் காரைக்கால் ஸ்டேஷனுக்குமுள்ள ரயில்வே.

அம்பகரத்தூர் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மட்சாலை மார்க்கமாய் ஒன்றரை மைலில் 116-திருக்கோட்டாறு என்ற திருக்கொட்டார மிருக்கின்றது.

குறிப்பு:—116-திருக்கோட்டாற்றிலிருந்து தென்கிழக்கே மட்சாலை மார்க்கமாய் இரண்டரை மைலில் திருநள்ளாறு ஸ்டேஷனிருக்கின்றது. 116 - திருக்கோட்டாற்றி னின்று கிழக்கே 2-மைலில் இளையான்குடி மாறநாயனார் இருந்தஸ்தலமாகிய திருஇளையான் குடி யிருக்கின்றது.

திருநள்ளாறு ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தெற்கே மட்சாலை மார்க்கமாய் அரை மைலில் 115-திருநள்ளாறும் இதினின்று கிழக்கேமட்சாலை மார்க்கமாய் 2-மைலில் 114-திருத்தருமபுரமு மிருக்கின்றன.

குறிப்பு:—ஸ்டேஷனி லிருந்து வடமேற்கே இரண்டரை மைலில் மட்சாலை மார்க்கமாய் 116-திருக்கோட்டாறு என்ற திருக்கொட்டார மிருக்கின்றது. 115-திருநள்ளாற்றுக்கும் 114-திருத்தரும புரத்திற்கும் மத்தியில் வைப்புத்தலமாகிய திருத்தக்களூர் இருக்கின்றது. 114-திருத்தரும புரத்தினின்று வடகிழக்கே காரைக்கால் மார்க்கமாய் 2-மைலில் புரையாறுரோட் ஸ்டேஷனிருக்கின்றது.

புரையாறு ரோட் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே கால் மைலில் 113-திருத்தெளிச்சேரியும், ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சா

Digitized by Google

லே மார்க்கமாய் 3-மைலிலுள்ள வரிச்சிகுடியினின்று கிழக்கே மட்சாலே மார்க்கமாய் ஒரு மைலில் 112-திருவேட்ட குடியு மிருக்கின்றன.

குறிப்பு :—112-திருவேட்டகுடியினின்று வடமேற்கே புரையாறு மார்க்கமாய் 10-மைலில் மாயூரம் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள 110-திருக்கடவூர் இருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே காரைக்கால் மார்க்கமாய் 2-மைலில் திருநள்ளாறு ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள 114-திருத்தருமபுரம் இருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து தெற்கே அரை மைலில் காரைக்கால் அம்மையார் திருவவதாரம் செய்த தலமாகிய காரைக்கால் இருக்கின்றது.

தஞ்சாவூர் ஜங்க்ஷன் (சேர்க்கை)ஸ்டேஷனுக்கும் நாகபட்டணம் ஸ்டேஷனுக்கும் உள்ள ரெயில்வே.

சாலிய மங்கலம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து கற்சாலே மார்க்கமாய் வடக்கே இரண்டரை மைலில் விண்ணாற்றின் களஞ்சேரிப்பாலமிருக்கின்றது. இதினின்று வடகரை மட்சாலே மார்க்கமாய் கிழக்கே 4-மைலில் 163-திரு அவளிவணல்லூரும், இதினின்று கிழக்கே மட்சாலே மார்க்கமாய் ஒரு மைலில் 162-திரு அரதைப்பெரும்பாழி என்ற அரித்துவாரமங்கலமு மிருக்கின்றன.

குறிப்பு:—களஞ்சேரிப் பாலத்தினின்று வடக்கே கற்சாலே மார்க்கமாய் 4-மைலில் (பாபவிநாசம் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 81-திருக்கருகாவூர் இருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே 8-மைலில் மட்சாலே மார்க்கமாய்(தஞ்சாவூர் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள)164-திருப்பருதி நியமம் என்ற பருதியப்பார் கோயிலிருக்கின்றது. 163-திரு அவளிவணல்லூரிலிருந்து தெற்கே கரைமார்க்கமாய் மூன்றரை மைலில் (மத்தியில் விண்ணாற்றுக்குப் பரிசு) அம்மாள்பேட்டை

Digitized by Google

ஸ்டேஷனிருக்கிறது.162-திரு அரதைப் பெரும்பாழி என்ற அரித்துவார மங்கலத்தினின்று கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 4-மைலில் (நீடாமங்கலம் ஸ்டேஷன்மார்க் கத்திலுள்ள 161-திரு இரும் பூளை என்ற ஆலங்குடியும், தெற்கே கரை மார்க்கமாய் (ஆற்றுக்குப் பரிசு) 3-மைலில் 165-திருவெண்ணி என்ற கோயில் வெண்ணியு மிருக்கின்றன.

அம்மாள் பேட்டை ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மட்சாலை மார்க்கமாய் மூன்றரை மைலில் 165-திருவெண்ணி என்ற கோயில்வெண் ணி யிருக்கின்றது.

குறிப்பு:—165-கோயில் வெண்ணியினின்று தென்கிழக் கே மட்சாலை மார்க்கமாய் மூன்றரை மைலில் நீடாமங்கலம் ஸ்டேஷனிருக்கின்றது. ஷை கோயில் வெண்ணியினின்று வ டக்கே கரை மார்க்கமாய் (ஆற்றுக்குப்பரிசு) 3 - மைலில் (சாலிய மங்கலம் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 162-திரு அரதைப்பெரும்பாழி யென்ற அரித்துவாரமங்கல மிருக்கி ன்றது. ஸ்டேஷனிலிருந்து வடக்கே மூன்றரை மைலில் (மத்தியில் வெண்ணாற்றுக்குப் பரிசு) 163-திரு அவளிவண ல்லூர் இருக்கின்றது.

நீடாமங்கலம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடக்கே கும்பகோணத்திற்குப் போகிற கற்சாலை மார்க்கத்தில் 4-மைலில் 161-திரு இரும் பூளை என்ற ஆலங்குடி இருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து தெற்கே மன்னார்குடிக்குப் போகிற கற்சாலையில் 2-மைலி லிருந்து (பாமணி யாற்றின்) மேல் பக்கமாய் அரை மைலில் 166-திருப்பூவனூரும்; இதினின்று ஷை கற்சாலை மார்க்கமாய் தெற்கே 9-மைலில் இருந்து பாமணி யாற்றின் வடகரை மட்சாலை மார்க்கமாய் வடகிழக்கே ஒன்றரை மைலில் 167-திருப்பாதாளீச்சுரம் என்ற பாம்பணியு மிருக்கின்றன.

Digitized by Google

குறிப்பு:—161-திரு இரும்பூளை என்ற ஆலங்குடியிலிரு ந்து, வடக்கே கற்சாலை மார்க்கமாய் 5-மைலில் கும்பகோண ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள வலங்கை மானும் மேற் கே 4-மைலில் மட்சாலை மார்க்கமாய் (சாலியமங்கலம் ஸ்டே ஷன் மார்க்கத்திலுள்ள) 162-திரு அரதைப் பெரும்பாழி என்ற அரித்துவார மங்கலமு மிருக்கின்றன. ஸ்டேஷனி லிருந்து வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் மூன்றரை மை லில் (அம்மாள் பேட்டை ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 165. திருவெண்ணி என்ற கோயில் வெண்ணியிருக்கின்றது. 167. திருப்பாதாளீச்சுரம் என்ற பாமணியிலிருந்து தென்கிழக்கே மன்னார்குடி மட்சாலை மார்க்கமாய் 11-மைலில் 174-திருக் கோட்டூர் இருக்கின்றது.

கோரடாச்சேரிஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலைமார்க்கமாய் கால ரை மைலிலுள்ள செல்லூரினின்று மேற்கே ஒரு மைலில் 176-திருக்கொள்ளம் பூதூரும், மேற்கண்ட செல்லூரிலிருந்து வடக்கே கற்சாலை மார்க்கமாய் மூன்றரை மைலில் 157-திரு க்குடவாயிலும், இதினின்று வடக்கே கற்சாலை மார்க்கமாய் 2-மைலில் 159/1-திருநாலூரும், இதினின்று வடகிழக்கே ஒரு மைலில் கரைமார்க்கத்தில் 159/2-திருமயானமும் இருக்கின் றன. 159/1-திருநாலூரிலிருந்து வடமேற்கே கற்சாலை மார்க் கமாய் ஒருமைலில் 158-திருச்சேறை (உடையார் கோயி லென்றும் பெயருண்டு) இருக்கின்றது.

குறிப்பு:— 157 திருக்குடவாயிலிலிருந்து மேற்கே மட் சாலை மார்க்கமாய் மூன்றரைமைலில் (கும்பகோணம் ஸ்டே ஷன்மார்க்கத்திலுள்ள) 160-திருக்கடுவாய்க்கரைப் புத்தூர் என்ற ஆண்டான்கோயிலும், தென்கிழக்கே மட்சாலை மார்க்க மாய் 5-மைலில் (குழிக்கரை ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 155-திருத்தலையாலங்காடும், கிழக்கே மட்சாலைமார்க்கமாய் 6-மைலில் நன்னிலம் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள 188-திரு வாஞ்சியமு மிருக்கின்றன. 156-திருத்தலையாலங் காட்டு

துத் தெற்கே ஒருமைலில் சுப்பிரமணிய க்ஷேத்திரமாகிய எண்கண் இருக்கிறது. 158-திருச்சேறையினின்று வடமேற்கே கற்சாலை மார்க்கமாய் 3-மைலில் (கும்பகோணம் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) நாச்சியார் கோயில் இருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து தெற்கே மட்சாலை மார்க்கமாய் 5-மைலில் (பொன்னிரை ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 175 திருவண்டுதுறை இருக்கின்றது.

குழிக்கரை ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடக்கே மட்சாலை மார்க்கத்தில் (ஆற்றுக்குப் பரிசு) 4-மைலிலுள்ள திருக்கண்ண மங்கையினின்று மேற்கே ஒரு மைலில் 154-திருக்கரைவீரம் என்ற கரையபுரமும், இதினின்று வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் ஒன்றரை மைலில் 155-திருப்பெரு வேளூர் என்ற அய்யன் பேட்டையும், இதினின்று மேற்கே மட்சாலை மார்க்கமாய் 2-மைலில் 156-திருத்தலை யாலங்காடு மிருக்கின்றன.

குறிப்பு:—156-திருத்தலை யாலங் காட்டிலிருந்து மேற்கே மட்சாலைமார்க்கமாய் 5-மைலில் (கொரடாச்சேரி ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 157-திருக்குடவாயில் இருக்கின்றது 154-திருக்கரை வீரம் என்ற கரைய புரத்திலிருந்து கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 7-மைலில் 151-திருவாரூர் இருக்கின்றது.

கீழ் வேளூர் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடக்கே ஒரு மைலில் 147-திருக்கீழ்வேளூரும், ஸ்டேஷனிலிருந்து தெற்கே 3-மைலில் மட்சாலை மார்க்கமாய் 148-திருத்தேவூரும் இருக்கின்றன.

குறிப்பு:—148-திருத்தேவூரிலிருந்து மேற்கே மட்சாலை மார்க்கமாய் 3-மைலில் திருநாட்டியத்தான்குடி ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள (183-திருக்கன்ருப்பூருக்கும் 184-திருவலிவலத்திற்கும் மத்தியில் சாலையில்) ஆதமங்கல மிருக்கின்ற

Digitized by Google

சிக்கல் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடக்கே அரை மைலில் 146-திருச்சிக்கல் இருக்கின்றது.

நாகபட்டணம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடமேற்கேமுக்கால் மைலில் 245-திருநாகைக்காரோணம் என்ற நாகபட்டணமிருக்கின்றது.

குறிப்பு:— இதினின்று தோணி மார்க்கமாய் 188-வேதாரணியத்துக்குப் போகலாம்.

ஆக சோழநாட்டுத்தலங்கள்

190 - முற்றிற்று.

———(*)———

ஈழநாட்டுத்தலங்கள் 2-இருக்குமிடம்.

இலங்கைத் தீவில் யாழ்ப்பாணத்திற்குத் தென்கிழக்கே 191-திருக்கோணமலையும், 192-திருக்கேதீச்சரமும் சுப்பிரமணிய க்ஷேத்திரமாகிய கதிர்காமமும் இருக்கின்றன:

ஈழநாட்டுத் தலங்கள்

முற்றிற்று.

Digitized by Google

ண்டி நாட்டுத்தலங்கள் 14-க்கும் செல்லும் மார்க்கம்:—

திருச்சிராப்பள்ளி ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்
), மதுரை ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் உள்ள
ல்வே.

—:*:—

குளத்தூர் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே கற்சாலை மார்க்கமாய்
மைலில் (குன்றுதோருடலில் ஒன்றாகிய விராலிமலை என்ற)
ராலிமலை இருக்கின்றது.

திண்டுக்கல் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலை மார்க்கமாய் (ஜட்
வண்டியுண்டு) 35-மைலில் (நடுவில் சத்திரப்பட்டி தங்கு
டம் இருக்கின்றது) முருகர் 3-வது படைவீடாகிய திருவா
னன் குடியும், பழநியும் இருக்கின்றன.

அம்மய நாயக்கனூர் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மட்சாலை மார்க்கமாய்
-மைலில் 197-திருச்கொடுங்குன்றம் என்றபிரான்மலையும்,
திலிருந்து தென்கிழக்கே மட்சாலைமார்க்கமாய் 15-மைலில்
18-திருப்புத்தூரும், இதினின்று வடகிழக்கே மட்சாலைமார்
மாய் 8-மைலில் (குன்றுதோருடலில் ஒன்றாகிய மையூரகிரி
ன்ற) குன்றக்குடியும், இதினின்று தென்கிழக்கேமட்சாலை
ர்க்கமாய் 18-மைலில் 202-திருக்கானப் பேர் என்ற காளை
ர் கோயிலும், இதினின்று கிழக்கேகற்சாலை மார்க்கமாய்
-மைலில் 201-திருவாடானையும், இதினின்று வடக்கே மட்
லை மார்க்கமாய் 12-மைலில் 199-திருப்புனவாயிலும், இதி
ன்று வடக்கே மட்சாலைமார்க்கமாய் 14 மைலில் ஸ்ரீமாணி
வாசக சுவாமிகளுக்கு உபதேசித்தருளியதலமாகிய (திருப்
பெருந்துறை என்ற) ஆவுடையார் கோயிலும், இதினின்று

Digitized by Google

வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் 7-மைலில் (மாயூரம்
துப்பேட்டை ரயில்வேத்தொடர் சம்பந்தமாய்ச் சீக்கிரத்
ஸ்டேஷன் ஏற்படக்கூடிய) அறந்தாங்கியுமிருக்கின்றன.

குறிப்பு:— தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து தென்மே
கே கற்சாலை மார்க்கமாய் (ஜட்காவண்டி யுண்டு) 36-ம
லிலும், திருச்சிராப்பள்ளி ஸ்டேஷனிலிருந்து தென்கி
க்கே கற்சாலைமார்க்கமாய் (ஜட்காவண்டி யுண்டு) 36-மை
லும் புதுக்கோட்டை இருக்கின்றது. இதினின்று, தென்மே
கே (பொன்னமராபதிக்கற்சாலை மார்க்கமாய் 26-மைலி
தெற்கே கற்சாலைமார்க்கமாய் 12-மைலிலுள்ள திருமெய்
திலிருந்து தென்மேற்கே கற்சாலைமார்க்கமாய் 19-மைலி
197-திருக்கொடுங்குன்றம் என்ற) பிரான்மலையிருக்கின்றது
மேற்கண்ட திருமெய்யத்தினின்று, தென்மேற்கே கற்சா
மார்க்கமாய் 15 மைலில் 198-திருப்புத்தூரும் தெற்கே கற்
லைமார்க்கமாய் 8-மைலில் (குன்றுதோறாடலில் ஒன்றாகிய வி
பூரகிரி என்ற) குன்றக்குடியும் தென்கிழக்கே காரைக்கு
கற்சாலைமார்க்கமாய் 22-மைலில் தேவிகோட்டை என்ற தே
வகோட்டையு மிருக்கின்றன. தேவ கோட்டையிலிருந்
தென்மேற்கே மட்சாலை மார்க்கமாய் 15-மைலில் 202-திரு
கானப்பேர் என்ற காளையார்கோவிலும், தென் கிழக்
மட்சாலை மார்க்கமாய் 7 - மைலில் 201-திருவாடானையு
கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 11-மைலில் 199-திரு
புனவாயிலும், வடகிழக்கே ஏம்பல் மட்சாலை மார்க்கமா
15-மைலில் திருப்பெருந்துறை என்ற ஆவுடையார்கோயி
இருக்கின்றன. 201 - திருவாடானையிலிருந்து தென்கிழக்
மட்சாலைமார்க்கமாய் 7-மைலில் துறைமுகமாகிய தொண்
ப்பட்டணம் இருக்கின்றது. மேற்கண்ட புதுக்கோட்டை
லிருந்து, கிழக்கே கற்சாலைமார்க்கமாய் (ஜட்காவண்டி யுண்
-0-மைலில் அறந்தாங்கி ஸ்டேஷன் இருக்கின்றது. திரு
பெருந்துறை என்ற ஆவுடையார் கோயிலினின்று கிழக்
கரைமார்க்கமாய் 1-மைலில் (குலச்சிறை நாயனார் திரு
வதாரம் செய்ததலமும், திருஞானசம்பந்தமூர்த்தி நாய

Digitized by Google

னாள் தங்கியிருந்த தலமுமாகிய) மணல்மேற்குடி இருக்கிறது. 202-திருக்கானப்பேர் என்ற காளையார்கோயிலினின்று தென்மேற்கே கற்சாலைமார்க்கமாய் 22-மைலிலும், -திருவாடானையினின்று தென்மேற்கே மட்சாலைமார்க்க 35-மைலிலும், மானாமதுரை ஸ்டேஷனிருக்கிறது. 3-திருப்புத்தூரிலிருந்து தென்மேற்கே மேலூர்கற்சாலைக்கமாய் 45-மைலில் 193-மதுரை இருக்கின்றது. 197-க்கொடுங் குன்றம் என்ற பிரான்மலையிலிருந்து தென்ற்கே கற்சாலைமார்க்கமாய் 18-மைலில் (மதுரைஸ்டேன்) மார்க்கத்திலுள்ள அழகர்கோயில் இருக்கின்றது.

சோழன் வந்தான் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே கற்சாலைமார்க்கமாய் மைலில் வைகைக்கீழ் கரையில் 196-திருவேடகம் இருக்கிறது.

மதுரை ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலைமார்க்கமாய் முக்கால் மைலில் 193-திருவாலவாய் என்ற மதுரையும்; இதன்வடகே கற்சாலைமார்க்கமாய் ஒருமைலில் வைகையாற்றின் வடகரையில் (பாலமுண்டு) 194-திருவாப்பனூர் என்ற திருவாப்புடையார் கோயிலும், இதினின்று வடகிழக்கே கற்சாலைமார்க்கமாய் 12-மைலில் முருகர் 6-வது படைவீடாகிய (அழகர்கோயில் என்று வழங்குகிற) பழமுதிர் சோலையுமிருக்கின்றன.

குறிப்பு:— அழகர் கோயிலிலிருந்து வடகிழக்கே கற்சாலைமார்க்கமாய் 18-மைலில் 197 திருக்கொடுங்குன்றம் என்ற பிரான்மலையிருக்கின்றது.

Digitized by Google

மதுரை ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், மண்டபம் ஸ்டேஷனுக்கும் உள்ளரயில்வே.

திருப்பூவணம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலைமார்க்கமாய் அ மைலிலும் 203-திருப்பூவணமும், இதினின்று தெற்கே க சாலை மார்க்கமாய் 12-மைலில் 204-திருச்சுழியலும், ஸ் ஷனிலிருந்து வடகிழக்கே மேலூருக்குப்போகிற கற்சால ர்க்கமாய் 8-மைலில் (ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் திருவவ ரம் செய்தருளிய தலமாகிய) திருவாதவூரும் இருக்கின்ற

மானா மதுரை ஸ்டேஷன்.

இதினின்று, வடகிழக்கே கற்சாலைமார்க்கமாய் 22-ை லில் 202-திருக்கானப்பேர் என்ற காளையார் கோயிலும் வ கிழக்கே மட்சாலைமார்க்கமாய் 35-மைலில் 201-திருவாடா யும் இருக்கின்றன.

இராமநாதபுரம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தெற்கே கற்சாலைமார்க்கமாய் 7-ை லில் (ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளால் திருவாசகம் பெற் தலமாகிய) உத்தரகோசமங்கையிருக்கின்றது.

மண்டபம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து (பாம்பன் ஆற்றுக்குத்தோணி) கிழ கே கற்சாலைமார்க்கமாய் 10 மைலில் 200-திருவிராமேச்சர இருக்கின்றது.

——:*:——

Digitized by Google

மதுரை ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், மணி
ச்சிஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் உள்ள ரயில்வே.

திருப்பரங் குன்றம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலைமார்க்கமாய் கால் மலில் 195-திருப்பரங்குன்றம் இருக்கின்றது இது முருகர் தற்படைவீடு.

கோயிற் பட்டி ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலைமார்க்கமாய் 12 மலில் (குன்று தோருடலில் ஒன்ருகிய) கழுமலையிருக்கி றது.

—:*:—

மணியாச்சி ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், தென்காசி ஸ்டேஷனுக்கும் உள்ளரயில்வே.

திருநேல்வேலி ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலைமார்க்கமாய் ஒன் றர மைலில் 206-திருநெல்வேலியும், இதன் தெண்கிழக்கே சாலைமார்க்கமாய் (நடுவில் தங்குமிடம் ஸ்ரீவைகுண்டம்) மைலில் முருகர் 2-வது படைவீடாகிய திருச்சீரலைவாய் ற திருச்செந்தூரும் இருக்கின்றன.

தேன்காசி ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலைமார்க்கமாய் மூன் றர மைலில் 205-திருக்குற்ருலம் இருக்கின்றது.

பாண்டி நாட்டுத்தலங்கள் 14

முற்றிற்று.

Digitized by Google

மலைநாட்டுத்தலமாகிய திரு அஞ்சைக்களத்திற்கு மார்க்கம்:—

போத்தனூர் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் கள்ளிக்கோட்டை ஸ்டேஷனுக்கும் உள்ள ரயில்வே.

சொரனூர் ஜங்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், கொச்சி ஸ்டேஷனுக்கு முள்ளரயில்வே.

இருஞாலக்கடை ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே மட்சாலைமார்க்கமாய் 4 மைலில் 207-திரு அஞ்சைக்களம் என்ற கொடுங்கோளூர் இருக்கின்றது.

மலைநாட்டுத்தலம் ஒன்று முற்றிற்று.

கொங்குநாட்டுத்தலங்கள் எ-க்கும் மார்க்கம்:—

திருச்சிராப்பள்ளி ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், ஈரோடு ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் உள்ள ரயில்வே.

கருவூர் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே கற்சாலை மார்க்கமாய் ஒன்றரை மைலில் 214-திருக்கருவூர் ஆனிலையும், அதினின்று தெற்கே கற்சாலை மார்க்கமாய் 12-மைலில் 212-திருவெஞ்சமாக் கூடலும் இருக்கின்றன.

Digitized by Google

திருப்பூர் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே கற்சாலை மார்க்கமாய் 3-மைலில் 209-திரு முருகன்பூண்டியும், இதினின்று மேற்கே கற்சாலைமார்க்கமாய் 3-மைலில் 208-திரு அவிநாசியும் இருக்கின்றன.

ஈரோடு ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே கற்சாலை மார்க்கமாய் 8-மைலில் 210-திருநணா என்ற பவானி முக்கூடல் இருக்கின்றது.

ஈரோடு ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், ஜோலார் பேட்டை ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் உள்ள ரயில்வே.

—:o:—

சங்கரகிரி துருக் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலைமார்க்கமாய் 5 மைலில் மலையடிவாரத்தில் 211-திருச்செங்குன்றூர் என்ற திருச்சங்கோடு இருக்கின்றது.

—(o)—

ஈரோடு ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், போத்தனூர் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் உள்ள ரயில்வே.

—o—

கோடுமுடி ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலைமார்க்கமாய் கால் மைலில் 213-திருப்பாண்டிக் கொடுமுடி இருக்கின்றது.

குறிப்பு:—208-திரு அவிநாசியிலிருந்து தெற்கே 6-மைலில் மங்கலம் ஸ்டேஷனிருக்கின்றது.

—:*:—

Digitized by Google

போத்தனூர் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் உதகமண்டலம் ஸ்டேஷனுக்கும் உள்ள ரயில்வே.

——:0:——

கோயம்புத்தூர் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலை மார்க்கமாய் 2-மைலில் பேரூர் என்ற மேலைச்சிதம்பரம் (வைப்புத் தலம்) இருக்கின்றது.

கொங்கு நாட்டுத்தலங்கள்

7 - முற்றிற்று.

நடுநாட்டுத்தலங்கள் 22-க்கும் செல்லும் மார்க்கங்கள்:—

சென்னபட்டணத்திலிருந்து தூத்துக்குடிக்குப் போகிற மார்க்கத்தின் மத்தியில் (முன்தொடர்.)

——:*:——

மாயூரம்ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், விழுப்புரம் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் உள்ளரயில்வே

——:*:——

சிதம்பரம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலைமார்க்கமாய் 12-மைலிலுள்ள குமாரகுடியினின்று மேற்கே மட்சாலை மார்க்கமாய் 4-மைலில் 217-திருக்கூடலையாற்றூரும், இதினின்று மேற்கே ஸ்ரீ முட்டம் மட்சாலைமார்க்கமாய் 10-மைலில் 218-

Digitized by Google

திரு எருக்கத்தம்புலியூர் என்ற ராஜேந்திரபட்டணமும், இதி
னின்று வடக்கே விருத்தாசலம் கற்சாலையில் 3-மைலிலுள்ள
மத்திலிருந்து மேற்கே மட்சாலை மார்க்கமாய் 3-மைலில்
16-திருத்தூங்கானை மாடம் என்ற பெண்ணாகடமும். இதன்
தன் மேற்கே மட்சாலைமார்க்கமாய் 4-மைலில் 215-திரு
யாத்துறையுமிருக்கின்றன. மேற்கண்ட கேமத்திலிருந்து
டக்கே கற்சாலைமார்க்கமாய் 7-மைலில் 223-திருமுதுகுன்
ம் என்ற விருத்தாசல மிருக்கின்றது.

குறிப்பு:—இந்த ஸ்டேஷனிலிருந்து சோழநாட்டுத்தலங்
ளுக்குச் செல்லும் மார்க்கம் மேலே சொல்லியிருக்கின்றது.
18-திரு எருக்கத்தம்புலியூர் என்ற ராஜேந்திரபட்டணத்தி
லிருந்து தெற்கே ஜயங்கொண்டசோழபுரம் மட்சாலை மார்க்
மாய் 26-மைலில் (குற்றாலம் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள
ாணசூரன் பூசித்ததலமும் திருவிசைப்பாபெற்ற தலமுமா
ய) கங்கை கொண்ட சோளேசுர மிருக்கின்றது. 216-திருத்
தூங்கானைமாடம் என்ற பெண்ணாகடத்திற்கும் 215-திரு அர
துறைக்கும் மத்தியில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்
நடந்த வருத்தத்தினால் தங்கிய இடமாகிய) மாறன்பாடியி
க்கின்றது. 223-திருமுது குன்றம் என்ற விருத்தாசலத்
லிருந்து, தென்கிழக்கே புவனகிரி கற்சாலைமார்க்கமாய் (ஜட்
வண்டியுண்டு) 36-மைலில் சிதம்பரம் ஸ்டேஷனும் வடக்
கற்சாலைமார்க்கமாய் 22-மைலில் பிரதான வர்த்தகஸ்தல
கிய உளுந்தூர்ப்பேட்டையு மிருக்கின்றன. உளுந்தூர்ப்
பேட்டையிலிருந்து, கிழக்கே பண்ருட்டி கற்சாலை மார்க்க
ய் 12-மைலில் (பண்ருட்டி ஸ்டேஷன் மார்க்கத்திலு
ள) 222-திருநாவலூரும் வடக்கே திருவெண்ணெய் நல்லூர்
சாலையில் 3-வது மைலிலுள்ள கிளைமருதூரிலிருந்து மேற்
மட்சாலைமார்க்கமாய் 3-மைலில் (மாம்பழப்பட்டு ஸ்டே
ஷன் மார்க்கத்திலுள்ள) 224-திருநெல் வெண்ணெய் என்ற
ய்வெண்ணெயும் மேற்கண்ட கிளைமருதூரிலிருந்து வடக்
கற்சாலைமார்க்கமாய் 10-மைலில் 228-திருவெண்ணெய்
லூரும் இதினின்று மேற்கே மட்சாலைமார்க்கமாய் 2-மை

Digitized by Google

வில் 227 - திருவிடையாறும் இதினின்று மேற்கே ஒத்தி ங்கமடம் மட்சாலைமார்க்கமாய் 7 - மைலில் 225-திருக்கோ வல் வீரட்டம் என்ற திருக்கோவலூரும் இருக்கின்றன. 22 திருவெண்ணெய் நல்லூரிலிருந்து வடக்கே மட்சாலைமார்க்க மாய் 6 மைலில் (ஆற்றுக்குப்பரிசும் பாலமுமில்லை) மாம்ப பட்டு ஸ்டேஷனிருக்கின்றது.

பரங்கிப்பேட்டை ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே நல்ல மட்சாலை மார்க் கமாய் 7-மைலில் 219-திருத்தினை நகர் இருக்கின்றது.

குறிப்பு:— திருத்தினை நகரிலிருந்துவடகிழக்கே மட் லைமார்க்கமாய் 5 - மைலில் ஆலம்பாக்கம் ஸ்டேஷனிருக் ன்றது.

ஆலம்பாக்கம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கரைமார்க்கமாய் (கான ற்றிற்குத்தோணி) ஒன்றரை மைலில் 220 - திருச்சோபு என்ற தியாகவல்லி இருக்கின்றது.

குறிப்பு:— ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே மட்சா மார்க்கமாய் 5-மைலில் 219-திருத்தினை நகர் இருக்கின்ற

கூடலூர் நியூட்டவுண் (பாதிரிப்புலியூர்) ஸ்டேஷ

ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலைமார்க்கமாய் அ மைலில் 232-திருப்பாதிரிப் புலியூரும், இதன்மேற்கே க லைமார்க்கமாய் 5-மைலிலிருந்து தெற்கே அரைமைலில் டநதித் தென்கரையில் 231-திருமாணிகுழியுமிருக்கின்ற

குறிப்பு:— 231-திருமாணிகுழியினின்று வடகிழக்கே ட்சாலைமார்க்கமாய் 6-மைலில் நெல்லிக்குப்பம் ஸ்டேஷ ருக்கின்றது.

நெல்லிக்குப்பம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே மட்சாலைமார்க்க ஒருமைலில் 233-திருமுண்டீச்சுரம் இருக்கின்றது.

Digitized by Google

குறிப்பு:— ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே கரைமா
மாய் 6-மைலில் 231-திருமாணிகுழியிருக்கின்றது.

பண்ருட்டி ஸ்டேஷன்

ஸ்டேஷனிலிருந்து கிழக்கே ஒருமைலில் 221 - திருவதி
வீரட்டானம் இருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து வட
ற்கே மட்சாலைமார்க்கமாய் 5-மைலில் 229-திருத்துறையூர்
றதிருத்தலூர் இருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து மேற்கே
ந்தூர்ப் பேட்டை மார்க்கமாய் விருத்தாசலத்திற்குப்
கிற கற்சாலையில் 12-மைலில் 222-திருநாவலூர் இருக்கி
து.

குறிப்பு:— 229-திருத்துறையூர் என்ற திருத்தலூருக்குத்
ற்கே கரைமார்க்கமாய் 2 - மைலில் சுந்தரமூர்த்தி நாயனர்
மணம் தவழ்ந்த ஸ்தலமாகிய மணந்தவழ்ந்த புற்றூரும், இ
ரின்று தெற்கே கரைமார்க்கமாய் 4-மைலில் திருநாவுக்க
நாயனர் திருவவதாரம் செய்த தலமாகிய திருவாய்மூரும்,
இனின்று மேற்கே மட்சாலை மார்க்கமாய் 5-மைலில் 222-
ருநாவலூரும், இதினின்று மேற்கே கற்சாலைமார்க்கமாய்
-மைலில் (பண்ருட்டி ஸ்டேஷனிலிருந்து மேற்கே திரு
வலூர் கற்சாலைமார்க்கமாய் 22-மைலில் சிதம்பரம், மாம
ப்பட்டு ஸ்டேஷன்களின் குறிப்பு மார்க்கத்திலுள்ள(உளுந்
ப் பேட்டையுமிருக்கின்றன.

விழுப்புரம் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே மட்சாலை மார்க்கமாய்
மைலில் 235- திருவாமாத்தூர் இருக்கின்றது. ஸ்டேஷனிலி
து வடக்கே சென்னபட்டணம் கற்சாலையில் 10-மைலில்
-திருப்புறவார் பனங்காட்டூர் என்ற பனையபுரம் இருக்
றது.

குறிப்பு:— 234-திருப்புறவார் பனங்காட்டூர் என்ற பனை
ரத்திலிருந்து வடமேற்கே கற்சாலை மார்க்கமாய் 10-மை
விக்கிரவாண்டி ஸ்டேஷனிருக்கின்றது.

விழுப்புரம் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனிலிருந்து
புதுச்சேரிக்குப்போகிற ரயில்வே, (பின்தொடர்ச்சி)

கண்டமங்கலம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே மட்சாலைமார்க்கமாய் 2-மை
லில் 230 - திருவடுவூர் என்ற திருவாண்டார் கோயிலிருக்கி
ன்றது.

விழுப்புரம் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனிலிருந்து
காட்பாடி (காட்டுப்பட்டி) ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷ
க்குப் போகிற ரயில்வே,

மாம்பழப்பட்டு ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தெற்கே மட்சாலை மார்க்கம
(ஆற்றுக்குப்பரிசும் பாலமுமில்லை) 6-மைலில் 228 - தி
வெண்ணெய் நல்லூரும், இதினின்று மேற்கே மட்சாலை மா
க்கமாய் 3-மைலில் 227 - திருவிடையாறும், இருக்கின்ற
228-திருவெண்ணெய் நல்லூரிலிருந்து தெற்கே கற்சாலை மா
க்கமாய் 10-மைலுள்ள கிளைமருதூரிலிருந்து மேற்கே மட்
லைமார்க்கமாய் 3-மைலில் 224 - திருநெல்வெண்ணெய் என்
நெய் வெண்ணெய் இருக்கின்றது.

குறிப்பு:—227-திருவிடையாற்றிலிருந்து மேற்கே
திலிங்க மடம் மட்சாலைமார்க்கமாய் 7-மைலில் (திருக்கோ
லூர் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 225-திருக்கோவல் வீ
டம் இருக்கின்றது. மேற்கண்ட கிளைமருதூரிலிருந்து தெற்
கற்சலைமார்க்கமாய் 3-மைலில் (228-திருவெண்ணெய் நல்
ரிலிருந்துதெற்கே கற்சாலைமார்க்கமாய் 13-மைலில்(சிதம்ப
பண்ருட்டி ஸ்டேஷன்கள் குறிப்பு மார்க்கத்திலுள்ள) உ
ளூர்ப்பட்டை யிருக்கின்றது. 224-திருநெல் வெண்ணெ

Digitized by Google

ன்ற நெய்வெண்ணெயிலிருந்து மேற்கே கற்சாலை மார்க்க
ாய் 2-மைலிலுள்ள இறையூருக்கு வடமேற்கே மட்சாலை
ார்க்கமாய் 14-மைலில் 225-திருக்கோவல் வீரட்டம் இருக்
ின்றது.

திருக்கோவலூர் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடக்கேவெகுசமீபத்தில் கற்பாறை
ின்மேல் 226-திரு அறையணி நல்லூரும், இதினின்று தென்
மேற்கே ஆற்றின் தென்கரையில் (ஆற்றிற்குப் பரிசும் பால
மில்லை) ஒருமைலில் 225-திருக்கோவல் வீரட்டமுமிருக்
கின்றன.

குறிப்பு:— 225 - திருக்கோவல் வீரட்டானத்திலிருந்து
தென்கிழக்கே கற்சாலைமார்க்கமாய் 14-மைலில் உள்ள இறை
யூரினின்றுகிழக்கே மட்சாலைமார்க்கமாய் 2-மைலில் 224-திரு
நெல் வெண்ணெய் என்ற நெய்வெண்ணெயும் கிழக்கே சித்தி
லிங்க மடம் மட்சாலைமார்க்கமாய் 7-மைலில் (மாம்பழப்பட்டு
ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள) 227-திருவிடையாறும் இருக்
கின்றன.

திருவண்ணாமலை ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து மேற்கே கற்சாலைமார்க்கமாய் அரை
மைலில் 236-திருவண்ணாமலை இருக்கின்றது.

நடு நாட்டுத்தலங்கள் 22

முற்றிற்று.

Digitized by Google

தொண்டை நாட்டுத்தலங்கள் 32-க்கு மார்க்கம்:—

விழுப்புரம் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், புதுச்சேரிஸ்டேஷனுக்கும் உள்ளரயில்வே. (முன்தொடர்ச்சி)

புதுச்சேரி ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மட்சாலை மார்க்கமாய் -மைலில் 268-திரு இரும்பை மாகாளமும், இதன் வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் 2-மைலில் 267-திரு அரசிலி என்ற ஒழுந்தியார் பட்டும், (இதினின்று மேற்கே மட்சாலை மார்க்கமாய் 3-மைலிலும், புதுச்சேரி ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலை மார்க்கமாய் 11-மைலிலுமுள்ள)வானூரிலிருந்து மேற்கே திண்டிவனம் கற்சாலையில் 3-மைலில் 226-திருவக்கரையிலிருக்கின்றன.

விழுப்புரம் ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், சங்கல்பட்டு ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் உள்ள ரயில்வே. (முன் தொடர்ச்சி)

மைலம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே கற்சாலை மார்க்கமாய் மைலில் மைலம் சுப்பிரமணிய க்ஷேத்திரம் இருக்கின்றது.

அச்சிறுபாக்கம் ஸ்டேஷன்:

ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே கற்சாலை மார்க்கமாய் அரைமைலில் 265-திருவச்சிறுபாக்கம் இருக்கின்றது.

Digitized by Google

செங்கல்பட்டு ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலை மார்க்கமாய் 9-மைலில் 264-திருக்கழுக்குன்றமும், (இதினின்று வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் 4-மைலிலும்)ஸ்டேஷனிலிருந்து 264-திருக்கழுக்குன்றத்திற்குப் போகிற கற்சாலையில் 3-மைலிலிருந்து வடக்கே மட்சாலை மார்க்கமாய் 2-மைலிலும் 263-திருவிடைச்சுரமும் இருக்கின்றன.

குறிப்பு:—264-திருக் கழுக்குன்றத்திலிருந்து வடகிழக்கே மட்சாலை மார்க்கமாய் 10-மைலில் திருப்போரூர் சுப்பிரமணியக்ஷேத்திரம் இருக்கின்றது.

செங்கல்பட்டு ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் அரக்கோணம் ஜங்க்ஷன்(சேர்க்கை)ஸ்டேஷனுக்கும், உள்ள ரயில்வே.

காஞ்சிபுரம் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து கற்சாலை மார்க்கமாய் ஒருமைலில் 237-திருக்கச்சி ஏகம்பம் என்ற காஞ்சிபுரமும், இதன்தென்மேற்கே கற்சாலை மார்க்கமாய் ஒருமைலில் 238-திருமேற்றளி என்ற பிள்ளையார் பாளையமும், 237-திருக்கச்சி ஏகம்பத்திற்கு வடமேற்கே கற்சாலை மார்க்கமாய் அரை மைலில் 239-திருவோணகாந்தன்றளியும், 238-திருமேற்றளிக்கும், 239-திருவோணகாந்தன்றளிக்கும் மத்தியில் (237-திருக்கச்சி ஏகம்பத்திற்குத் தென்மேற்கே கற்சாலை மார்க்கமாய் அரைமைலில் 240-திருக்கச்சி அனேகதங்காவதமும்; 237-திருக்கச்சி ஏகம்பத்தினின்று தென்கிழக்கே (விஷ்ணு காஞ்சிக்குப் போகிற கற்சாலையில் 2-மைலிலிருந்து வடக்கே அரைமைலில்) 241-திருக்கச்சி நெறிக் காரைக் காடும்; 237-திருக்கச்சி ஏகம்பத்தினின்று தெற்கே மட்சாலைமார்க்கமாய் 6-மைலில் பாலாற்றின் தென்கரையில் 242-திருக்குரங்கணின் முட்டமும், இத

தென்கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 6 மைலில் 243-திருப்பறலும், இதினின்று தென்மேற்கே மட்சாலை மார்க்கமாய் 15-மைலில் செய்யாற்றின் வடகரையில் 244-திரு வோத்தூர் என்ற (அனுக்கா) வோத்தூரும், இதன் வடகிழக்கே மட்சாலை மார்க்கமாய் 12. - மைலில் 245 - திருப்பனங்காட்டூரும் இருக்கின்றன.

குறிப்பு:— 245-திருப்பனங்காட்டூரிலிருந்து, மேற்கே மட்சாலை மார்க்கமாய் ஒருமைலில் வன்பார்க்கமும் கிழக்கே மட்சாலை மார்க்கமாய் 4-மைலில் 242-திருக்குரங்கணின் முட்டமும் வடக்கே மட்சாலை மார்க்கமாய் 6-மைலில் 237-திருக்கச்சி ஏகம்பமுமிருக்கின்றன.

பள்ளூர் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே மட்சாலை மார்க்கமாய் 2-மைலில் 247-திருமாற்பேறு என்ற திருமால்பூர் இருக்கின்றது. (இதன் மத்தியில் கோவிந்தவாடி அகரம் தெக்ஷணாமூர்த்தி விசேடம்.)

குறிப்பு:— ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே மட்சாலை மார்க்கமாய் 6-மைலில் மனவூர் ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள 248-திருவூறல் என்ற தக்கோலமிருக்கின்றது.

செங்கற்பட்டு ஜங்க்ஷன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும், சென்னபட்டணம் ஸ்டேஷனுக்கும், உள்ள ரயில்வே.

சிங்கப்பெருமாள் கோயில் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் ஒருமைலில் 262-திருக்கச்சூர் ஆலக்கோயில் இருக்கின்றது.

Digitized by Google

சேன்னபட்டணம் எழுமூர் ஸ்டேஷன்.

ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே கற்சாலை மார்க்கமாய் ◌மலில் 260-திருமைலாப்பூரும், இதினின்று தென்கிழக்கே சாலை மார்க்கமாய் 4-மைலில் 261-திருவான்மியூருமிருக் ◌றன.

சென்னபட்டணம் ஸ்டேஷனுக்கும், ஆர்க்கோணம் ஜங் ◌ன் (சேர்க்கை) ஸ்டேஷனுக்கும் உள்ள ரயில்வே.

வில்லி யாக்கம் ஸ்டேஷன்.

